இரட்சிப்பு

# கிருபை பொருந்தியவன் | கிருபை இல்லாதவன்

## கிருபையாக வாழும் வழி

❖ நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டபடியால், நாமும் மற்றவர்களிடம் கிருபை பொருந்தினவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். (ரோமர் 3:24, 12:9–17, 14:1,2, 15:5 எபேசியர் 2:8, தீத்து 3:6)

| கிருபை பொருந்தியவன் | கிருபை இல்லாதவன் |
|---|---|
| 1. மற்றவர்களுக்கு விடுதலை கொடுக்கிறவராக இருக்கிறவர்கள். (மற்றவர்கள் சுதந்திரத்தில் தலையிடாதவர்கள்) | 1. மற்றவர்களை அடிப்படைப்படுத்துகிறவர்கள் அடக்கி ஆள விரும்புகிறவர்கள் |
| 2. குற்ற உணர்விலிருந்து அவர்களுக்கு விடுதலை கொடுக்கிறவர்கள் | 2. குற்ற உணர்வை அதிகப்படுத்துகிறவர்கள் |
| 3. உற்சாகப்படுத்துகிறவர்கள் | 3. சோர்ந்து போக பண்ணுகிறவர்கள் |
| 4. கட்டும் ஆக்கப் பணியில் ஈடுபடுகிறவர்கள் | 4. உடைந்து போக பண்ணும் காரியங்களில் ஈடுபடுகிறவர்கள், புண்படுத்துகிறவர்கள் |
| 5. வலிமைகளை, திறமைகளை எடுத்துக் காண்பிக்கும் ஒருவராய் இருக்கிறவர்கள் | 5. குற்றங்களையே சுட்டிகாட்டும் ஒருவராய் இருக்கிறவர்கள் |
| 6. சக விசுவாசிகளோடு ஒத்துப் போகிறவர்கள் | 6. மற்றவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கிறவர்கள் மற்றவர்களோடு ஒத்துப் போவதற்கு சிரமப்படுகிறவர்கள் |
| 7. மற்றவர்கள் தவறுகளை மனப்பூர்வமாய் மன்னிக்கிறவர்கள் | 7. மற்றவர்கள் தவறுகளை மனப்பூர்வமாய் மன்னிக்காதவர்குலூ |

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

| | |
|---|---|
| 8. மற்ற விசுவாசிகளை அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்களோ அப்படியே அவர்களை ஏற்றுக் கொள்பவர்கள். வேறுபட்ட கருத்து உடையவர்களையும் (சாதி, சபைப்பிரிவு, விசுவாச குறைவு, நிறம், வயது) ஏற்றுக் கொள்பவர்கள் | 8. வேறுபட்ட/மாறுபட்ட காரியங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள். என்னைப் போல ஆராதிக்கவில்லை என்பதால் சிலரை ஒதுக்கி விடுகிறவன். வித்தியாசமானவர்களாய் இருப்பதினால் அவர்களை வெறுப்பது நாம் விரும்புவதை மற்ற விசுவாசி விரும்பாததினாலே அவர்களை பகைப்பது |
| 9. நேசிக்கப்படத்தக்க, விரும்படத்தக்க விசுவாசியாக இல்லாத போதும் நேசிக்க வேண்டும். (தேவன் ஒவ்வொருவரையும் வித்தியாசமானவர்களாக படைத்திருக்கிறார் வேறுபாடுகளை தேவன் ரசிக்கிறவராக இருக்கிறார்) | 9. பழக்கவழக்கம் பிடிக்கவில்லை, ரசிக்கவில்லை என சக விசுவாசியை வெறுப்பது. |

❖ (மத்தேயு 18:23–35) வசனம் 33–ல் இரக்கம் பெற்றது போல, இரக்கம் காட்ட வேண்டும்.

(ரோமர் 14)




